**செய்தி வெளியீடு எண்: 102** **நாள்: 05.02.2020**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 4.2.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில், 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்பட்ட கோயம்புத்தூர் லூம்வேர்ல்டு விற்பனை நிலையம் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான மதுரை, மேலமாசி வீதியிலுள்ள காதி கிராப்ட் கட்டடத்தை 80 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்து, நவீனமயமாக்கப்பட்ட ''காதி மார்ட்'' கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

2017–18ஆம் ஆண்டிற்கான கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் மானியக் கோரிக்கையில், கோயம்புத்தூர் லூம்வேர்ல்டு விற்பனை நிலையத்தின் உள் அலங்கார வேலைப்பாடுகள் மற்றும் தோற்றங்களை மறுசீரமைத்து, வாடிக்கையாளர்களை பெருமளவில் ஈர்க்கவும், கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்கவும் நவீனமயமாக்கப்படும் என்றும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் மதுரை மாநகரில் தற்போது செயல்பட்டு வரும் காதி கிராப்ட் கட்டடம் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய ''காதி மார்ட்'' என்ற பெயரில் நவீனமயமாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில் கோயம்புத்தூர் – சாய்பாபா காலனியில் அமைந்துள்ள லூம்வேர்ல்டு விற்பனை நிலையத்தின் தோற்றங்கள் மறுசீரமைக்கப்பட்டு, புதிய பொலிவுடன் தரைத் தளத்தில் பட்டு மற்றும் பருத்தி இரக விற்பனை பிரிவு, முதல் தளத்தில் படுக்கை விரிப்புகள், போர்வைகள் மற்றும் ஆடவர் ஆடை இரகங்கள் விற்பனை பிரிவு, அழகிய உள் அலங்கார வேலைப்பாடுகள், குளிர்சாதன வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்பட்ட கோயம்புத்தூர் லூம்வேர்ல்டு விற்பனை நிலையம்;

**1921–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22–ஆம் நாள், மதுரை, மேலமாசி வீதியிலுள்ள இந்த காதி கிராப்ட் கட்டடத்தில்தான், வறுமையில் வாடித்தவிக்கும் பாமரமக்களில் தானும் ஒருவர் என்பதை உணர்த்தும் வகையில், அண்ணல் காந்தியடிகள் முழந்தாள் வரை ஆடை உடுத்தும் விரதத்தை துவக்கி அன்று முதல் கடைபிடித்தார்.**

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க மதுரை, மேலமாசி வீதியிலுள்ள காதி கிராப்ட் கட்டடம், அதன் பழமை மாறாமல் தற்போது சீரமைக்கப்பட்டு, புதிய தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ள கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை வளாகம், நவீன மர அலமாரிகள், ஜெனரேட்டர், குளிர்சாதன வசதி, ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு தண்ணீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 80 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்து, நவீனமயமாக்கப்பட்ட "காதி மார்ட்" கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு. க. பாஸ்கரன், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி கி. சாந்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 5.2.2020**